இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 57 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 21 – செவ்வாய்க்கிழமை 07 அக்டோபர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 57 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 21 - Tuesday 07 October 2025 - Chennai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 137 கோடியே 31 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 சமூகநீதி விடுதிக் கட்டடங்கள், 39 கோடியே 29 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் 39 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான வகுப்பறை கட்டடங்கள், 12 கோடியே 72 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் பழங்குடியினர்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 250 வீடுகள், 15 கோடியே 93 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கிராம அறிவுசார் மையங்கள், 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பல்நோக்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.173.81 கோடி செலவிலான மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.20.15 கோடி மதிப்பீட்டிலான மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, தஞ்சாவூர், சேலம், பாளையங்கோட்டை உணவுப் பகுப்பாய்வு கூடங்களில் 24 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன உபகரணங்களை பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு பொதுத்துறை ஊழியர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்பட

# 20 சதவிகித மிகை ஊதியம், கருணைத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 7 -

**அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ‘C’ மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமிக்க மாநிலமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துவதில் தொழிலாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இவர்களின் உழைப்பின் பலனாக தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியை மட்டுமல்லாது, அந்நிய முதலீடுகளையும் ஈர்த்துவருகிறது. 2024 - 25ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதமான 9.69 சதவீதம் என்பது நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த தாகும் என்பதோடு, கடந்த 4 ஆண்டு களில் தமிழ்நாடு பெற்றிருக்கும் மிக உயர்ந்த வளர்ச்சியுமாகும். இவ்வளர்ச்சியை எட்டுவதில் அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணி யாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் முக்கிய பங்களிப்பாக அமைந்துள்ளது.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாநிலத்தின் முன்னேற்றத் திற்குத் தூண்களாக திகழ்கிறார்கள். மேலும், நாட்டில் பெண்கள் அதிக அளவில் பணியாற்றும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகமும் திகழ்கிறது. பெண்கள் அதிகாரமடையவும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடையவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பெண்களுக்கான இலவச பேருந்து பயணத் திட்டமான “விடியல் பயணம்” திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், எளிதில் ஏற்கக்கூடிய குறைந்த வாடகையில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

### உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கிய பங்கு!

மேலும், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் கட்டுமானப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சக்தியே ஒரு நாட்டை உயர்த்தும் என்பதையும், உற்பத்தியைப் பெருக்கி பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதிலும் இவர்களின் பங்கு முக்கியமானது என்பதையும் கருத்தில் கொண்டு, பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் 2024-25 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



திருத்தப்பட்ட போனஸ் சட்டம், 2015 படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ. 21,000 எனவும், இதன்படி மிகை ஊதியம் கணக்கிட மாதாந்திர சம்பள உச்சவரம்பு ரூ.7,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உச்சவரம்பை தளர்த்தி, அனைத்து ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் 2024-25ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை கீழ்வருமாறு வழங்கப்படும்:

1. இலாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணி புரியும் ‘C’ மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறு வனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.
2. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.
3. ஒதுக்கக்கூடிய உபரி தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் “C” மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.
4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதி யுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.
6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ. 3,000/ கருணைத் தொகையாக வழங்கப்படும்.

### குறைந்தபட்சம் ரூ.8400-ம் அதிகபட்சம் ரூ.16800-ம் பெறுவர்

இதனால், மிகை ஊதியம் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8400/ மற்றும் அதிகபட்சம் ரூ.16800/ வரை பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2,69,439 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.376.01 கோடி மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இது தவிர, பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங் களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை, பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்படவும், எதிர்வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வழிவகை செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

---

### நீதித்துறையின்

## உயர்ந்த பொறுப்பின் மீது நடத்தப்பட்ட வெட்கக்கேடான தாக்குதல்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக்.7-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**இந்தியத் தலைமை நீதிபதி பி. ஆர்.கவாய் அவர்கள் மீது உச்சநீதிமன்றத்தினுள் நடத்தப்பட்ட வெட்கக் கேடான தாக்குதல் என்பது நமது ஜனநாயகத்தில் நீதித்துறையின் மிக உயர்ந்த பொறுப்பின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். இது மிகக் கடுமையான கண்டனத்துக்குரிய செயல்.**

**அமைதியாகவும் கருணையோடும் பெருந்தன்மையோடும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் இதற்கு எதிர்வினையாற்றியது நீதித்துறையின் வலிமையைக் காட்டுகிறது. எனினும், இத்தாக்குதலை நாம் சாதாரணமானதாகக் கருதலாகாது.**

**தாக்குதலை நடத்தியவர் அதற்குக் கூறிய காரணம், நம் சமூகத்தில் இன்னும் அடக்குமுறை - ஆதிக்க மனப்பான்மை எந்த அளவுக்கு ஆழமாகப் பதிந்துள்ளது என்பதையே காட்டுகிறது.**

**ஒரு சமூகமாக, நமது மக்களாட்சியின் நிறுவனங்களை மதிக்கும், பாதுகாக்கும் பண்பையும்; நடத்தையில் முதிர்ச்சியை வெளிப்படுத்தும் போக்கையும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

---

### பீகார் சட்டசபைக்கு நவ. 6,11 தேதிகளில்

## 2 கட்டங்களாக தேர்தல்! 14 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை!

### அக். 10 முதல் வேட்புமனு தொடக்கம்! தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, அக்.7-

பீகார் சட்டசபை தேர்தல் நவம்பர் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் 2 கட்டங்களாக நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14ஆம் தேதி அன்று நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பீகாரில் 243 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் தேதியை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-



பீகாரில் மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ளன. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 7.43 கோடி, இதில் சுமார் 14 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்களாக உள்ளனர். பீகார் தேர்தல் அமைதியான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படும்.

அனைத்து அதிகாரிகளும் முற்றிலும் பாரபட்சமற்ற முறையில் செயல்பட வேண்டும். எந்தவொரு ஊடகம் அல்லது தளத்திலும் ஏதேனும் போலி செய்திகள் அல்லது தவறான தகவல்கள் இருந்தால், அது குறித்து விசாரணை நடத்தப்படும். போதைப்பொருள், மதுபானம் மற்றும் ரொக்க பரிவர்த்தனையைத் தடுக்க அனைத்து சோதனைச் சாவடிகளிலும் கடுமையான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும். பீகார் மாநில சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும்.

நவம்பர் 6-ம் தேதி மற்றும் 11 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14-ம் தேதி நடைபெறும். முதல் கட்ட தேர்தலுக்கு அக்டோபர் 10-ம் தேதி வேட்பு மனுதாக்கல் தொடங்குகிறது. முதல் கட்ட வேட்பு மனுதாக்கலுக்கு கடைசி நாள் அக்.17-ம் தேதி ஆகும். மனுக்களை திரும்பப்பெற அக்.20-ம் தேதி கடைசி நாள் ஆகும். பீகார் 2-ம் கட்ட தேர்தலுக்கு அக்.13-ல் வேட்பு மனு தாக்கல் தொடங்குகிறது. 2-ம் கட்ட தேர்தலில் மனு தாக்கலுக்கு அக்.20-ம் தேதி கடைசி நாள் ஆகும். அடுத்த நாள் வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும்.

2-ம் கட்ட தேர்தலில் வேட்பு மனுக்களை திரும்பப்பெற அக்.23-ம் தேதி கடைசி நாள் ஆகும். முதல் கட்டத்தில் 121 தொகுதிகளுக்கும் 2-ம் கட்டத்தில் 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. இந்த 2 கட்டங்களில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 14 ஆம் தேதி அன்று எண்ணப்படும்.

இவ்வாறு தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறினார்.